தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **IA.No.** | **:** | IA.1/2022in<br>ID.7/2020,8/2020,16/2020,49/2020,<br>126/2021 | சாட்சியம் | **:** | **RW2** |
| **Name** | **:** | திரு.சதிஷ் | | | |
| **Date** | **:** | **21.06.2025** | | | |
| **Time** | **:** | **10.36 a.m to 11.16 a.m** | | | |

எ.த.சா.**2.**திரு.சதிஷ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

இன்றைய தேதியில் ஒரகடம் கிளையில் உள்ள ராயல் என்ஃபீல்டு கம்பெனியில் 1287 பேர் வேலை பார்க்கிறார்கள். அவர்களில் எங்கள் சங்கத்தில் சுமார் 300 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள்.ஒரகடம் கிளையில் 1308 பேர் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்றாலும் அந்த விவரம் கூட தெரியாமல் சங்கம் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வெளிமாநிலத்தில் மாற்றம் செய்யப்பட்ட தொழிலாளர்களும் தற்சமயம் அழைக்கப்பட்டு இருக்கும் காரணத்தினால் தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடியுள்ளது. எங்கள் சங்கத்தில் 300 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என காட்ட E-படிவம் தாக்கல் செய்துள்ளேன். 300 பேரில் எத்தனை பேர் ஒரகடம் கிளையில் வேலையை செய்து வருகிறார்கள் என்றால் சுமார் 200 பேர். 200

பேருக்கும் சந்தா பிடிக்கப்படுகிறது. அதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை ஆனால் பணம் செலுத்தியதற்கான அத்தாட்சி ஒவ்வொரு தொழிலாளி வசமும் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் ஓரகடம் ராயல் என்ஃபீல்ட் எம்ப்ளாயீஸ் ஜெனரல் யூனியன் என்ற சங்கத்திற்கு சம்பளத்தில் சந்தா பிடித்து வரும் விவரம் தெரியுமா என்றால் எங்களுடைய சங்கம் செயல்பட்டு வரும் பொழுது தொழிலாளர்களின் ஒப்புதல் இல்லாமல் அவர்களுக்கு தெரியாமல் தன்னிச்சையாக மேற்படி சங்கத்தில் நிர்வாகம் சந்தா பிடித்தம் செய்து வருகிறது. தொழிலாளர்களின் ஒப்புதல் இல்லாமல் நிர்வாகம் அவர்களின் சம்பளத்திலிருந்து நேரடியாக சந்தா தொகை பிடித்து வருவது சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நிர்வாகம் அது போன்று தன்னிச்சையாக எத்தனை ஆண்டுகளாக சந்தா தொகையை பிடித்து வருகிறது என்றால் தெரியாது. நிர்வாகம் கடந்த நான்கு ஆண்டுகளாக சந்தா பிடித்தம் செய்து வருகிறது என்றாலும் இதுவரையில் யாரும் அது சம்பந்தமாக புகார் தெரிவிக்கவில்லை என்றாலும் தவறு. JCL லில் இது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த புகார் நகல் தாக்கல் செய்யப்படவில்லை புகார் கொடுக்கப்படவில்லை என்றால் தவறு. புகார் கொடுக்கப்பட்டிருந்தால் அதன் நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும் புகார் கொடுக்கப்படாத காரணத்தினால் தான் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் ஓரகடம் கிளையில் வேலை பார்த்தேனா என்றால் வேலை பார்த்து வந்தேன் ஆனால் நிர்வாகம் என்னை பணி நீக்கம் செய்துள்ளது. நான் சங்கத்தின்

பொருளாளராக 08.05.2022 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டேன். 08.05.2022 தேதி அன்று நான் பணியில் இல்லை. நான் கடைசியாக பிப்ரவரி 2019 ல் தான் வேலை பார்த்தேன் என்றால் ஆமாம். ராயல் என்ஃபீல்டு எம்பிளாயிஸ் யூனியனை சேர்ந்த உறுப்பினர்கள் சுமார் 1272 நிர்வாகத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்ப பெற்றுக் கொள்வதாகவும் மேற்படி சங்கத்தை கலைத்து விடுவதாகவும் தீர்மானம் இயற்றினார்கள் என்றால் நிர்வாகத்தின் நிர்பந்தத்தின் காரணமாக அது போன்று தீர்மானம் இயற்றப்பட்டது. அது போலியான தீர்மானம் ஆகும். 06.02.2022 அன்று அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் தீர்மானமே போலியானதாகும். தீர்மானத்தின்படி JCL, டி.சி.எல் முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்றால் இல்லை. 22.02.2022 அன்று நிலுவையில் இருந்த போனஸ், கருணைத்தொகை சம்பந்தமான வழக்கு, பாதுகாக்கப்பட்ட தொழிலாளர் என அறிவிக்க கேட்ட வழக்கு, தொழிலாளர் விரோத போக்கு சம்பந்தப்பட்ட வழக்கு, சந்தா தொகை பிடித்தம் செய்யக்கூடாது என்பது சம்பந்தப்பட்ட வழக்கு ஆகியவை திரும்ப பெறப்பட்டன என்றால் தெரியாது. தேர்தல் நடைபெற்று நான் சங்கத்தின் பொருளாளராக தேர்ந்தெடு க்கப்பட்டேனா என்றால் ஆமாம். தேர்தல் 2022 ஆம் ஆண்டு நடைபெற்றது தேதி, மாதம் நினைவில்லை. தேர்தலில் என்னை எதிர்த்து யாரும் போட்டியிட்டார்களா என்றால் இல்லை. பொதுக்குழு கூட்டத்தில் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். சங்க நிர்வாகிகள் அனைவரும் பொதுக்குழு

கூட்ட தீர்மானத்தின்படி ஒருமனதாக தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இன்றைய தேதியில் எங்கள் சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகளில் எத்தனை பேர் தொழிலாளர்களாக தொடர்ந்து இருந்து வருகிறார்கள் என்றால் சொக்கலிங்கம், வினோத் என்ற தொழிலாளர்களை தவிர மற்ற அனைவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்கள். குசேலன், ராம்பாபு, சம்பத், ஏகாம்பரம் ஆகியோர் நிர்வாகத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டர்களா என்றால் இல்லை. சங்கத்தில் இருக்கும் உறுப்பினர்களில் வினோத், சொக்கலிங்கம் தவிர வேறு யாரும் வேலை செய்யவில்லை என்றால் மற்ற உறுப்பினர்கள் அனைவரும் வேலை செய்ய தயாராக தான் இருக்கிறார்கள் ஆனால் நிர்வாகம் அனுமதிக்கவில்லை. சங்கத்தின் துணை விதிகளின்படி ஒரு நிர்வாகியின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள். நான் 2022 ஆம் ஆண்டிலிருந்து பொருளாளராக இருந்து வரும் காரணத்தினால் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்கப்படுவதற்கு என சிறப்பு விதிகள் எதுவும் இயற்றப்பட்டது என்றால் கடந்த ஆண்டு பொதுக்குழு தீர்மானத்தில் மீண்டும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். கடந்த வருடம் பொதுக்குழு நடந்தது என காட்ட நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. ராயல் என்ஃபீல்டு எம்பிளாயிஸ் யூனியன் சகத்தை சேர்ந்தவர்கள் தீர்மானம் இயற்றி அதன் முன்னிலையில் அனைத்து வழக்குகளும் திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த வழக்கும் திரும்ப பெறுவதற்கான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த தீர்மானம் போலியானது ஆகும். அந்த நிர்வாகிகளை நாங்கள் சங்கத்தில்

இருந்து நீக்கி விட்டோம். பிப்ரவரி 2022 ல் அவர்கள் தானாகவே சங்கத்திலிருந்து விலகி விட்டார்கள். 04.02.2022 தேதியிட்ட தீர்மானத்தில் நிர்வாகிகளை சங்கத்திலிருந்து நீக்கிவிட்டதாக அல்லது அவர்களே நீங்கிவிட்டதாகவோ கண்டுள்ளதா என்றால் இல்லை அதன் பிறகு தான் அவர்கள் சங்கத்தில் இருந்து நீக்கப்பட்டுவிட்டனர். அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டதற்கான தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது எ.சா.ஆ.7 ஆகும். எ.சா.ஆ.7 ல் நிர்வாகிகள் நீக்கப்பட்ட தாகவோ அவர்களாகவே நீங்கி விட்டதாகவோ வாசகம் கண்டுள்ளதா என்றால் இல்லை. சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்த தொழிலாளர்கள் எத்தனை பேர் நீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் சந்தா செலுத்தாத உறுப்பினர்கள் நீக்கம் செய்யப்பட்டார்கள். எண்ணிக்கை தெரியவில்லை. சுமார் 1200 உறுப்பினர்கள் நீக்கப்பட்டு இருப்பார்களா என்றால் தெரியவில்லை. எங்கள் சங்கம் நிர்வாகத்துடன் ஏதேனும் ஊதியம் சம்பந்தப்பட்ட போனஸ் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் போட்டு உள்ளதா என்றால் இல்லை. ராயல் என்ஃபீல்டு எம்பிளாய் சங்கத்தின் இன்றைய தேதி வரையில் எதிர்மனுதாரர் நிர்வாக தொழிலாளர்கள் யாரும் உறுப்பினர்களாக இல்லை என்றாலும் என்னை வேலை நீக்கம் செய்த காரணத்தினால் காழ்புணர்ச்சியுடன் தொடர்ந்து அந்த சங்கத்தை நடத்தி வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ராயல் என்ஃபீல்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் இன்றைய தேதி வரையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எங்கள் சங்கத்தை சேர்ந்த பெரும்பாலான

உறுப்பினர்கள் பொதுச் செயலாளர் தலைமையில் தீர்மானம் இயற்றி வழக்கை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும் என முடிவு செய்திருக்கும் காரணத்தினால் இந்த மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் தவறு.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA
Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.06.21 15:47:19 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:21.06.2025.